**கவனிக்க**.- 2007.02.23 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1487 - 2007 මාර්තු 02 වැනි සිකුරාදා - 2007.03.02

1487 ஆம் இலக்கம் - 2007 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 140 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 140 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க**.- (i) சேர் பெறுமதி வரி (திருத்தம்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(ii) பற்றுக்கள் வரி (திருத்தம்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

(iii) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2007, சனவரி மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்**. வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும் பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2007, மாச்சு 09 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2007, பெப்புருவரி 23 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2007 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அட்டோர்ணித் தத்துவப்பத்திரம் இரத்துச் செய்தல

இங்கிலாந்து பேர்லிதுரோப் றுட்லேன்ட் LE 157 FD இல் அமைந்துள்ள மெனர் ஒழுங்கையிலுள்ள இலக்கம் 03 குலொக் அவுஸ் கோர்டில் வசிக்கும் ஹேமா உக்வத்தகே லியனகே ஆகிய நான், இல. 40, 4 ஆம் ஒழுங்கை, ரத்மலானையில் வசிக்கும் சந்திரிமா றொட்ரிகோ அவர்களுக்கு எதிரிசிங்க முதியன்சேலாகே ஆரியதாச மற்றும் ஹேவகே நயோமனி றுசிகா ஜயவர்தன ஆகிய சாட்சியங்கள் முன்னிலையில், 2002, யூலை 18 ஆந் திகதி சட்டத்தரணியும் நொத்தாரிசுமான எம். எப். ஸ்பொறோல அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 2697 கொண்ட அட்டோர்ணி தத்துவப்பத்திரம் இத்தால் ரத்துச் செய்யப்பட்டு செல்லுபடியாகாதென்று பொது மக்களுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

ஹேமா உக்வத்தே லியனகே.

3- 84

---

## அட்டோர்ணித் தத்துவப் பத்திரம் இரத்துச் செய்தல்

கோட்டே, மாதிவெல, 3 ஆம் ஒழுங்கையில் 23/19 இல் வசிக்கும் இரத்நாயக்க ஆரச்சிலாகே நலின் இரத்நாயக்க ஆகிய நான், இராஜகிரிய, வெலிகடவத்த வீதியில் இல. 08 இல் வசிக்கும் இரத்நாயக்க ஆரச்சிலாகே அஜித் இரத்நாயக்க என்பவரை அட்டோர்ணித் தத்துவக்காரராக நியமிக்கப்பட்ட (பதிவு கந்தோர், கொழும்பில் வொளியூம் 198 போலியோ 25 பதிவு இலக்கம் 3470 என்று 1999 யூன் 06 பதிவு செய்யப்பட்ட) கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். எச். கே. ஜி. பேர்சி த சில்வாவினால் 1999 மே மாதம் 3 ஆந் திகதி அத்தாட்சி செய்த 2149 இலக்கம் கொண்ட அட்டோர்ணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்து விட்டேன்.

இன்றைய திகதியிலிருந்து மேற்கூறிய இரத்நாயக்க ஆரச்சிலாகே அஜித் இரத்நாயக்க என்பவரினால் எனது பெயரிலும் எனது சார்பாக செய்து கொள்ளப்படும் எதுவித சம்பந்தங்களுக்கும் நான் பொறுப்பாளியாக மாட்டேன் என்பதனை இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் சகல பொதுமக்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

இரத்நாயக்க ஆரச்சிலாகே நலின் இரத்நாயக்க,

2007, பெப்புருவரி 14.

3- 101

---

## அட்டோர்ணித் தத்துவப் பத்திரம் இரத்துச் செய்தல்

இதன் கீழ் கையொப்பமிட்ட இலக்கம் 143, சியம்பலபே தெற்கு, சியம்பலபே இனை வதிவிடமாக கொண்ட ரன்சனி பத்மலதா ராஜபத்மவும் உதித ராஜபத்ம ஆகிய நாங்கள் இத்தால் இலங்கை அரசாங்கத்திற்கும், பொதுசனங்களுக்கும் அறிவிப்பதாவது, எங்களால் இலக்கம் 143, சமதி மாவத்த, சியம்பலபே தெற்கு, சியம்பலபேவில் வதிவிடமாகக் கொண்ட உபுல் அருண ஹெட்டிஆராச்சிக்கும், இலக்கம் 55, மாகோல தெற்கு,மாகோலயில் வதிவிடமாக கொண்ட விக்கிரமசிங்ஹ வாசல முதியான்சலாகே பிரியங்கா அசோக பண்டாரவிற்கும் வழங்கப்பட்ட இலக்கம், 1940, 2004 ஆண்டு செத்தெம்பர் மாதம் 2 ஆந் திகதிய பிரசித்த நொத்தாரிசு கே. ஏ. குணசேக்கர அவர்களினால் எழுதி நிறைவேற்றப்பட்ட அற்றோனி தத்துவத்துவப் பத்திரத்தை இரத்து செய்கிறோம் என்பதை அறியத் தருகிறோம், மேலும் மேற்குறிப்பிடப்பட்ட அற்றோனி தத்துவப்பத்திரத்தைக் கொண்டு செய்யப்படும் எந்த செயற்பாடுகளுக்கும் இத்தால் நாங்கள் பொறுப்பாக மாட்டோம் என்பதனையும் அறியத்தருகிறோம்.

ரஞ்சித் பத்மலதா ராஜபத்ம மற்றும் உதித ராஜபக்ஷ.

3- 107

---

# ஏல விற்பனைகள்

## வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் - மாத்தறை கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

### ஆதனம் ஏலவிற்பனை

மாத்தறை பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. ஸெனரத் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான ஹட்டன் நஷனல் வங்கியின் பெயரால் எழுதப்பட்டதுமான 2002.03.04 ஆந் திகதிய இல. 2887 முறியின் கீழ் வருமதியான கொடுப்பனவில் ஜாஸின் கந்தகே தொமிஸ்ஸன் என்பவர் கடனாளராக தவணை தவறியுள்ளாராதலாலும்,

வரையறுக்கப்பட்ட ஹட்டன் நேஷனல் வங்கி என் மீது அளிக்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் கீழே குறிப்பிடும் சொத்து அது அமைந்துள்ள இடத்திலேயே 2007.03.19 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு என்னால் பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

**ஆதனத்தின் விவரணம்.**- தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம கோறளை கொடவில மற்றும் கபுருகமுவ கிராமத்தில் இருக்கும் "பின்னகொடயாவத்த எஸ்டேட் " இல் லொட் 3 எனும் பெயரால் அறிமுகப்படுத்தப்படும் காணித்துண்டுக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் குசுமன் சிரிவத்தன என்பவர் 2001.07.18 ஆந் திகதி அளந்து வேறாக்கப்பட்ட இல. 358/ 2001 என்னும் வரைபடத்தின் அளந்து வேறாக்கப்பட்ட லொட் 11 என்ற காணித்துண்டும் அதில் இருக்கும் கட்டடங்களும் மற்றும் அனைத்தும் ஆகும்.

(காணியின் விஸ்தீரணம் : 8.31 பேர்ச்சஸ்)

**தீர்மான அறிவித்தல்.**- தயவுசெய்து 2006.12.01 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2006.12.20 ஆந் திகதிய "ஐலன்ட்", "திவயின", "தினகரன்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏலத்தின் இறுதியில் சித்திகரமான கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைப் பணமாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ;
(2) உள்ளூரதிகார சபைக்கான வரியாக ஒரு வீதம் (1%) ;
(3) ஏலதாரர் தரகுப் பணமாக கொள்வனவு விலையின் 2 1/2% ;
(4) எழுதுவினைஞரினதும் கூப்பிடுவோரினதும் ஊதியம் ரூபா 500 ;
(5) வேறு செலவினங்கள் ;
(6) விற்பனை நிபந்தனைகளுக்காக நொத்தாரிசு அத்தாட்சிப்படுத்தப்பட்ட கட்டணம் ரூபா 2000.

விலைக்கு வாங்கிய பணத்தில் 90% பங்குப் பணத்தை 30 நாட்களுக்குள் வரையறுக்கப்பட்ட ஹட்டன் நஷனல் வங்கிக்குச் செலுத்துதல் வேண்டும். 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய 10% தைத் திருப்பிச் செலுத்தாமல் இருக்கவும் மீள சொத்தை விற்பதற்கும் வங்கிக்கு உரிமை உண்டு.

உரிமை பத்திரங்கையும் மேலதிக விவரங்களையும் "முகாமையாளர் ஹட்டன் வங்கி கிளை (தொலைபேசி இலக்கம் 041- 2222588) அல்லது கொழும்பு 10, டி. பி. ஜாயா மாவத்தை, இல. 479, பிரதான அலுவலகம், பிரதம முகாமையாளரிடம் (கடன் அறவீடு) (தொலைபேசி இல. 2661815, 2661816)" இல் பெற்றுக்கொள்ளலாம்.

என். எச். பி. எவ். ஆரியரத்ன
நீதிமன்ற ஆணையாளர்,
அதிகாரம் பெற்ற ஏலதார்.

இல. 34/31 மற்றும் 32,
நீதிமன்ற சட்டத்தரணிகளின் அலுவலகத் தொகுதி,
கொழும்பு - 12.

3-126

---

## இலங்கை வங்கி

*1968 ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க அதிகாரச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும் கீழ் விற்பனை செய்தல் தொடர்பான அறிவித்தல்*

### சொத்து, நிலமனை ஏலவிற்பனை

*(இல. 131, யாஹல தென்னகந்த, வெரெல்லகம என்னும் முகவரியைச் சேர்ந்த திரு. பேலவ தும்பேலே கெதர பிறனீத் நிசாந்த குமார, திரு. பேலவ தும்பேலே கெதர சிறிசேன என்பவர்களினால் ஈடுவைக்கப்பட்ட ஆதனம்.)*

கடன் தொடர்பு இலக்கம் : 2488/2000.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 01.04.2005 ஆந் திகதிய 1387 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 29.03.2005 ஆந் திகதிய "தினமின", "தினகரன்", "டெய்லி நியூஸ்" ஆகிய புதினப்பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாகவுள்ள வட்டியையும் செலவு மற்றும் மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்களையும் அறவிடும் பொருட்டு இதன்கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப் பட்டுள்ள சொத்தும் நிலமனையும் இல. 24, ரொறிங்டன் றோட், கண்டி என்னும் முகவரியைச் சேர்ந்த ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களால் 2007.03.27 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், ஹாரிஸ்பத்து, கலுகம்மனசியபத்து (பி) பறிகமவில் அமைந்துள்ள, உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். நவரத்ன அவர்களால் தயாரிக்கப்பட்ட 1996, யூன் 24 ஆந் திகதிய 1275 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்டுள்ள "யாஹலதென்னவத்த" என்றழைக்கப்படும் காணியின் பாகமொன்றாகிய மேற்குறிப்பிட்ட வரைபடத்திற்கிணங்க- வடக்கில் : பிபி. மஹ 2596 இன் 17 ஆந் துண்டும் ; கிழக்கில் : துண்டு 2 உம் ; தெற்கில் : பிபிமஹ 2596 இன் 45 ஆம் துண்டு ; மேற்கில் : பிபி. மஹ 2596 இன் துண்டு 21உம் எல்லைகளாகக் கொண்ட, முப்பத்துமூன்று தசம் ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 33.6பே.) அல்லது 0.085 ஹெக்ரயார் விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும்.

மேற்குறிப்பிட்ட காணியானது முன்னர் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளது

மேற்கூறியவாறு (பி) பறிகமவில் அமைந்துள்ள, அளவையாளர் அதிபதியினால் சரியென அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ள பிபி.மஹ 2596 கொண்ட வரைபடத்தில் துண்டு 20 எனக்காட்டப்பட்டுள்ள, வடக்கில் : 17 ஆந் துண்டும் ; கிழக்கில் : துண்டு 1உம் ; தெற்கில் : 45 ஆம் துண்டும் மேற்கில் : துண்டு 21 உம் எல்லைகளாகக் கொண்ட பூச்சியம் தசம் பூச்சியம் எட்டு ஐந்து ஹெக்ரயார் (0.085 ஹெக்ரயார்) விஸ்தீரணமுடைய பிரித்து நிர்ணயிக்கப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும் அதற்குள் அமைந்துள்ள அனைத்துமாகும். இது கண்டி காணிப்பதிவத்தில் எச். 28/583 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

இ. எம். யூ. பண்டார,
பிரதான முகாமையாளர்.

இலங்கை வங்கி,
மேற்தரக் கிளை,
கண்டி.

3-128

---

## கமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் - அநுராதபுரம் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட சட்டம்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

### வசிப்பிடத்திற்கு பொருத்தமான சொத்து பகிரங்க ஏல விற்பனை

**ஹாரிஸ்பத்துவ பிரதேச சபை எல்லைக்குட்பட்ட கட்டுகஸ்தோட்டை ரனவன கிராமத்தில் ஜனரஜ மாவத்தையில் "கம்பொலாயாகேவத்த" தற்போது வத்த எனும் காணியில் பிரித்தெடுக்க்பபட்ட**

**காணித்துண்டும் அத்துடன் இதனுள்ளடங்கும் வீட்டுக் கட்டிடமும் மற்றும் சலதுமாகும். இது 1 றூட், 13.05 பேர்ச்சஸ் பரப்பளவானதாகும்.**

*(இவ்வாதனம் சியம்பலாதுவ பத்திரணகே லயானந்த ரத்னசிரி என்பவர் கடப்பாடுடையவராக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக கமர்ஷல் பேங்க் ஓப் சிலோன் லிமிட்டெட்ட் வங்கியினால் பெறப்பட்ட ஆதனம்.)*

இவ்வாதனம் 30.03.2007 ஆந் திகதி மு. ப. 10.30 மணிக்கு அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2006.09.29 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் விற்பனை பற்றிய அறிவித்தலுக்கு 2006.09.18 ஆந் திகதிய "லங்காதீப", "தினகரன்" மற்றும் "த ஐலன்ட்" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**ஆதனத்தை வந்தடைதல்.**- கட்டுகஸ்தோட்டை கடைத் தெருவிலிருந்து மெதவல பாதையில் சுமார் 1 கிலோ மீற்றர் தூரம் ரனவன வரை சென்று வலது பக்கமாக திரும்பி ஜனரஜ மாவத்தையில் சுமார் 100 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகவுள்ள 10 அடி அகலமான பாதையில் சற்றுதூரம் சென்றால் இவ்வாதனத்தை வந்தடையலாம்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10% உள்நாட்டு வரி 1 %, ஏலவிற்பனையார் கட்டணம் 2 1/2%, நொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 சகல பகிரங்கப்படுத்தல் செலவு. கொள்முதல் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் கமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட் தலைமை அலுவலகத்தில் அல்லது அநுராதபுரம் கிளைக்கு செலுத்தப்படுதல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களை அறிவதற்கு.**- "பிரதான முகாமையாளர்., கமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் லிமிட்டெட், 271, மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, அநுராதபுரம் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. -025-2223597-8, 025-2223599, 025-5810005, பெக்ஸ் : 025-2223596

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/6, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4213497,
071- 2755974, 071-4755974
பெக்ஸ் இல. : 081-2211025

3-137 / 1

**வரையறுக்கப்பட்ட கமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் - தம்புள்ள கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க சட்டத்தின் வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விஷேட சட்டம்) 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை

**குடியிருப்பதற்கு சகல வசதிகளையும் கொண்ட ஆதனம் பகிரங்க ஏல விற்பனை**

**கலேவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட தம்புள்ள குருனாகல், பாதையில் மிகவும் சமீபமாக தலகிரியாகம ஊரில் தலகிரியாகம மையவாடி பாதையில் அமைந்துள்ள "கிளர கொல்ல" பகுதியில் அமைந்துள்ள இடத்தின் பிரித்த பகுதியும் மற்றும் வீட்டுக் கட்டிடமும் அனைத்துமாக 1 றூட் பரப்பளவாகும்.**

*(இந்த ஆதனம் "நாளிகமகே காமினி" என்பவர் வரையறுக்கப்பட்ட கமார்ஷல் பேங்க் ஒப் சிலோன் வங்கிக்கு கடப்பாடுடையவராக வங்கியினால் பெறப்பட்ட கடன் வசதிகளுக்காக ஈடுவைக்கப்பட்டுள்ளது).*

இவ்வாதனம் 2007.03.27 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஆதனம் அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2006.09.15 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2006.09.04 ஆந் திகதிய "லங்காதீப", "த ஐலன்ட்" மற்றும் 2006.09.02 ஆந் திகதிய "தினகரன்" பத்திரிகைகளை பார்க்கவும்.

**இடத்திற்கு உட்பிரவேசிக்க.**- தம்புள்ள நகரிலிருந்து குருனாகல் பிரதான பாதையில் கி. மீ. 8.50 மட்டு பகலவெவ வரை சென்று வலது பக்கத்தில் அமைந்தள்ள "எதா பெதிவெவ" பாதைக்கு திரும்பி அதே பாதையில் கி. மீ. 1 மட்டும் சென்று வலதுக்குள்ள தலகிரியாகம மையவாடி பாதைக்கு திரும்ப அதே பாதையில் 200 மீற்றர் மட்டும் செல்லும் போது அந்த ஆதனம் உள்ளது.

**கொடுப்பனவு முறை.**- விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க்காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாகச் செலுத்தப்படல் வேண்டும் :-

கொள்முதல் விலையில் 10% உள்நாட்டு வரி 1 %, ஏலவிற்பனையாளர் கட்டணம் 2 1/2%, நொத்தாரிஸ் கட்டணம் ரூ. 2,000, இலிகிதர் மற்றும் கூப்பிடுவோர் கட்டணம் ரூ. 500 சகல பகிரங்கப்படுத்தல் செலவு. கொள்முதல் மிகுதி 90% விற்பனை நாளிலிருந்து 30 நாட்களுக்குள் பிரதான அலுவலகத்தில் அல்லது தம்புள்ளக் கிளைக்கு செலுத்தப்படல் வேண்டும்.

**உரித்தாதனம் மற்றும் விபரங்களுக்கு.**- "பிரதான முகாமையாளர் (சட்டம்), வரையறுக்கப்பட்ட கமார்ஷல் பேங்க் ஒப் சிலோன்,

இல. 642, அநுராதபுர பாதை தம்புள்ள தொடர்பு கொள்ளவும். தொலைபேசி இல. 066-2284934-5, 066-2283215, பெக்ஸ் : 066-2284950

ஐ. டபிள்யு. ஜயசூரிய,
நீதிமன்றங்கள் மற்றும் வர்த்தக வங்கிகளினால்
உத்தரவாதம் பெற்ற ஏலவிற்பனையாளர்.

இல. 83/5, போமலுவ பாதை,
வட்டபுலுவ,
கண்டி.
தொலைபேசி இல. : 081-2211025, 071-4213497,
071-2755974, 071- 4755974
பெக்ஸ் இல. : 081-2211025

3-137 / 2

---

### மக்கள் வங்கி - அளவ்வ கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால்
திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,
மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான
விற்பனை அறிவித்தல்

**குருநாகல் மாவட்டம், தம்பதெனிய ஹத்பத்துவ, உடுகஹ கிழக்குக் கோரலை, கல்கமுவ என்ற கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவையாளர் நாயகம் அவர்களினால் அளந்து தயாரிக்கப்பட்ட க. கி. ப. 447, ஆம் இலக்க வரைபடத்தின் 339 ஆம் இலக்க கெபெல்ல கொள்ள மூக்கலான என்ற காணிக்கு 2000.05.06 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட 1010 ஆம் இலக்க வரைபடத்தின் 02 ஆம் இலக்க காணியும் அதனுள் அமைந்துள்ள மரம், செடி, பழவகை, கட்டிடம் உட்பட அனைத்தும் அடங்கலாக ஏல விற்பனை விஸ்தீரணமுள்ள காணியும், அதனுள் அமைந்துள்ள பெறுமதியான கட்டிடம் உட்பட அனைத்தும்**

**(பரப்பளவு : 0ஏ. 0றூ. 31.8 பே.)**

மக்கள் வங்கியின் பணிப்பாளர் சபையால் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் 2007.03.27 ஆந் திகதிய மு.ப. 11.00 மணிக்கு குறிப்பிட்ட சொத்து அமைந்துள்ள இடத்தில் என்னால் பிரசித்த ஏலவிற்பனை செய்யப்படும்.

**மேலதிக விபரங்களுக்கு.**- 2004.03.19 ஆந் தேதிய அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையையும் 2004.05.18 ஆந் தேதிய "டெயிலி நியூஸ்", 2004.05.18 ஆந் திகதிய "தினமின", "தினகரன்" ஆகிய பத்திரிகளையும் பார்க்கவும்.

**ஆதனத்திற்குச் செல்லும் பாதை.**- அளவ்வை நகரத்திலிருந்து நாரம்மல பாதையில் 08 கிலோ மீட்டர் அளவு சென்றவுடன் மஹரச்சிமுள்ள சந்தியில் கல்கமுவ பாதையின் வலது பக்கமாக இந்த ஆதனம் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை முடிந்ததும் வெற்றி பெறும் கொள்வனவாளர் பின்வரும் தொகைகளைக் காசாகக் கொடுக்கவேண்டும் :-

(1) தாம் வாங்கிய விலையின் 10 %த்தையும் ;
(2) உள்ளூரதிகாரச் சபையினதும், பிரதேச சபையினதும் 1 % வரியையும் ;
(3) ஏலவிற்பனையாளரின் பங்காக ஏலவிற்பனை தொகையின் 2 1/2 % கமிசனையும் ;
(4) எழுதுவினைஞர்களினதும் அறிவிப்பாளர்களினதும் கட்டணமாக ரூ. 500 ஐயும் ;
(5) விற்பனைச் செலவு மற்றும் ஏனைய செலவுகள் இருப்பின் அந்தப் பணத்தையும் ;
(6) விற்பனைச்சான்றிதலுக்கான முத்திரைக் கட்டணத்தையும், விலைக்கு வாங்கிய பணத்தின் மிகுதி 90 வீத பங்கு பணத்தை ஏலவிற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் குருநாகல் மக்கள் வங்கி பிரதேச பிரதான முகாமையாளரிடம் செலுத்தப்படல் வேண்டும். தொலைபேசி இல. 037- 2222453, பெக்ஸ் இல. 037- 2222338.

உரிமைப்பத்திரம், மேலதிக விவரங்களை கீழ் குறிப்பிட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும். மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி பணத்தை 30 நாட்களுக்குள் செலுத்தத் தவறின் ஏற்கனவே செலுத்திய பணத்தின் 10% தையும் திரும்பிச் செலுத்தாமலிருக்கவும், மீண்டும் சொத்தை விற்பதற்கும், வங்கிக்கு உரிமையுண்டு.

டபிள்யு. எம். ஐ. கல்லேல்ல, (சமாதான நீதவான்),
நீதிமன்ற ஆணையாளர், உத்தரவு பெற்ற
ஏலதாரர், மதிப்பீட்டாளர்.

இல. 28, புதிய சட்டத்தரணிகள் கட்டிடத்தொகுதி,
குமாரதுங்க மாவத்தை,
குருநாகல்.
தொலைபேசி இல. 037- 2220062.

3- 157

---

### மக்கள் வங்கி - பொலனறுவ (005) கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால்
திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க,
மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான
விற்பனை அறிவித்தல்

**பொலனறுவ மாவட்டத்தில் சேவாகம கொலணியில் அமைந்துள்ள, ஏலவிற்பனைக்குரிய பெறுமதியான காணி, வீடு, பண்டகசாலை மற்றும் அரிசி ஆலை திட்டம் ஆகியவற்றை உள்ளடக்கிய பெறுமதிமிக்க காணி ஏல விற்பனை**

**(விஸ்தீரணம் : இரண்டு ஏக்கர், இரண்டு றூட், இருபத்தேழு பேர்ச்சஸ் (02ஏ. 02றூ. 27பே.)**

மக்கள் வங்கி எங்களுக்கு வழங்கியுள்ள அதிகாரத்தின் கீழ் 28.03.2007 ஆந் திகதிய பிற்பகல் 12.30 மணிக்கு இக்காணி அமைந்துள்ள அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

இந்த தீர்மானம் பற்றிய மேலதிக விவரங்களை தயவு செய்து 11.10.2002 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி, மற்றும் 21.09.2002 ஆந் திகதிய "டெயிலி நியூஸ்", "தினமின" ஆகிய புதின பத்திரிகைகள் மூலம் தயவு செய்து தெரிந்து கொள்ளவும்.

**காணிக்கு செல்லும் வழி.**- பொலன்னறுவை ஆதார வைத்தியசாலைக்கு அருகில் தம்பலா வீதியில் சுமார் 8 கிலோ மீட்டர் தூரம் சென்றவுடன் வெவதென்ன கிராமத்தில் முதலாவது மின்சார ஸ்ரான்ஸ் போமர் அருகில் இடதுபக்கத்தில் செல்லும் மணல் வீதி வழியாக 450 மீட்டர் தூரம் சென்றவுடன், வீதியின் வலது பக்கத்தில் இந்த காணி அமைந்துள்ளது.

**காணி பற்றிய விவரணம்.**- வடமத்திய மாகாணம், பொலன்னறுவ மாவட்டத்தில் லங்காபுரர பிரதேச வருமான வரி அலுவலர் பிரிவில் மத்திய மற்றும் எகோட பத்துவ 73,ஈ லக் ஷ உயன கிராம அலுவலர் பிரிவில் சேவாமுக்த ஜனபதய என்ற கிராமத்தில் அமைந்துள்ள நிலஅளவைநாயகம் என்பவரால் தயாரிக்கப்பட்டு அவரின் பொறுப்பில் உள்ள F. C. P. No. 13 என்ற இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 36 இன்படி இக்காணி இரண்டு ஏக்கர், இரண்டு றூட், இருபத்தேழு பேர்ச்சஸ் (02, 02றூ. 27பே.) விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது. இதன்படி, வடக்கில் : காணித்துண்டு இல. 31 ; கிழக்கில் : காணித்துண்டு இல. 35 ; தெற்கில் : காணித்துண்டு இல. 35 மற்றும் 42 ; மேற்கில் : காணித்துண்டு இல. 11 (வீதி) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் அதன் கண் அமைந்துள்ள மரங்கள், செடிகள், கட்டடங்கள் மற்றும் அனைத்துமாகும். இது பொலன்னறுவ மாவட்ட காணிப்பதிவுக் காரியாலயத்தில் இல. 1/ 3/ 5/ 198 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**கொடுப்பனவு செலுத்தும் முறை.**- ஏலவிற்பனை முடிந்ததும் வெற்றி பெறும் விலைக்கோள்வியாளர் பின்வரும் தொகைகளைக் காசாகக் கொடுக்கவேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10 % ;

(2) உள்ளூரதிகாரச் சபை வரிகளாக கொள்வனவு விலையின் 1 % ;

(3) விற்பனை விலையில் ஏலதாரருக்கு பணம் 2 1/2 % ;

(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலங் கூறுபவர் கட்டணமாக ரூ. 500;

(5) விற்பனைச் செலவு மற்றும் வேறு கட்டணம் இருப்பின், அது ;

(6) விற்பனையை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைக் கட்டணம்.

(7) செலுத்தும் தொகையில் 15% வெட் வரிக்காக ;

(8) கொள்முதல் தொகையின் மிகுதி 90% ஐ விற்பனை செய்யப்பட்ட திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் கீழ்காணும் முகவரியிலுள்ள உதவி பொது முகாமையாளருக்கு செலுத்த வேண்டும்.

உதவி பொது முகாமையாளர் (வடமத்திய வலயம்) மக்கள் வங்கி, பிராந்திய தலைமை அலுவலகம், புதிய நகரம் பொலனறுவ தொலைபேசி இல. 027- 2224404, 027-2223900, 027- 2225760, பெக்ஸ் இல. 027- 2223522 உரிமையை ஸ்தாபிக்கும் காணி உறுதிப்பத்திரம் மற்றும் அது தொடர்பான வேறு குறிப்புரைகளையும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் பெற்றுக்கொள்ள முடியும்.

மேற்குறிப்பிட்டுள்ள தொகையை 30 நாட்களுக்குள் செலுத்தப் படாமல் விட்டால் ஏற்கனவே செலுத்திய கொள்முதல் விலையின் 10% ஐ வங்கி மீண்டும் செலுத்தாது என்ற அதிகாரத்தை பெற்றிருப்பதுடன் மீண்டும் அந்த காணியை விற்பனை செய்யும் அதிகாரம் வங்கிக்கு உண்டு.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
இலங்கையின்அரச மற்றும் தனியார்
வங்கிகளின் முன்னோடி பிரசித்தி பெற்ற
ஏலதாரர்களும் நீதிமன்ற ஆணையாளர்களும்.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகம் : |
|---|---|
| 24, டொறிங்டன் வீதி, கண்டி. | 55 ஏ, தர்மபால மாவத்தை, கொழும்பு 3. |
| தொலைபேசி : 081-2224371, 081-2227593 | தொலைபேசி : 011-2448526, 011-2441761 |
| தொலைநகல் : 081-2224371 | தொலைநகல் : 011-2448526, |

ஈமெயில் : samera@srilanka.net

3- 159

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**1995 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.**

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8 அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணி வரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் "சுப்றீம் கோட்" புறொடக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1995 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூ. | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 51 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | 51 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 504 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 1,008 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும், கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **1995 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 1,612.00 | 2,098.00 |
| II ஆவது பகுதி தொடக்கம் VI பகுதி வரை தனிப்பகுதி | 572.00 | 745.00 |
| I வது பிரிவு | 520.00 | 1,007.00 |
| II வது பிரிவு (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆதியன) | 624.00 | 1,009.00 |
| III வது பிரிவு | 468.00 | 907.00 |
| அதிவிசேட விசேட வர்த்தமானி | 3,360.0 | 4,422.00 |

முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.

தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை ரூ. ச. | அஞ்சற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|
| (அ) | I வது பகுதி | 31.00 | 5.00 |
| | II வது பகுதி தொடக்கம் VI பகுதி வரை ஒவ்வொரு பகுதியும் | 11.00 | 5.00 |
| (ஆ) | I வது பிரிவு | 10.00 | 5.00 |
| | II வது பிரிவு | 12.00 | 5.00 |
| | III வது பிரிவு | 9.00 | 5.00 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத்தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், 32, லோட்ஸ் வீதி, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும்* ***அரசாங்க பிரசுராலய அதிபர், 32, லோட்டஸ் வீதி, கொழும்பு 1*** *என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும்.* ***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தா பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.***

***முக்கிய கவனிப்பு.-*** *இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும்* ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்*** *என்பதையும்,* ***அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது*** *என்பதையும் கவனத்திற் கொள்க.*

***அட்டவணை-2007***

| *மாதம்* | | *வெளியீட்டு நாள்* | | | *அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும்* | | |
|---|---|---|---|---|---|---|---|
| **மாச்சு** | .. | வெள்ளி | 02.03.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 15.02.2007 |
| | | வெள்ளி | 09.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.02.2007 |
| | | வெள்ளி | 16.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.03.2007 |
| | | வெள்ளி | 23.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.03.2007 |
| | | வெள்ளி | 30.03.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.03.2007 |
| **ஏப்பிறல்** | .. | வியாழன் | 05.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.03.2007 |
| | | வியாழன் | 12.04.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.03.2007 |
| | | வெள்ளி | 20.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 05.04.2007 |
| | | வெள்ளி | 27.04.2007 | .. | நண்பகல் 12 | வியாழன் | 12.04.2007 |
| **மே** | .. | வெள்ளி | 04.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 20.04.2007 |
| | | வெள்ளி | 11.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 27.04.2007 |
| | | வெள்ளி | 18.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.05.2007 |
| | | வெள்ளி | 25.05.2007 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.05.2007 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2007, சனவரி 01.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.